## வாரியபொல பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 23 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------------------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வாரியபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 132,655,410 தொகை ஆகும். அவற்றில் அண்மித்த நூற்றிற்கு 5.5 என ரூபா 7,308,279 தொகை 3 வருடங்களை விட மிகைத்த காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 73,089,439 ஆகும். அவற்றில் அண்மித்த நூற்றிற்கு 4 என ரூபா 3,242,281 தொகை 3 வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

02. நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 34,185,282 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,381,390 ஆக காணப்பட்டமையால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 25,803,892 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த செற்பாட்டு விளைவிற்கு ரூபா 148,422,759 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 156,851,769 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 25,756,272 இற்கான மிகையாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 173,460,707 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 72.29 தொகை என ரூபா 125,404,528 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை அடங்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 148,422,759 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைக்கப்பெற்ற பணத்தினை அடங்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 139,275,425 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 37.61 என ரூபா 52,380,418 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் அண்மித்த நூற்றிற்கு 88.04 என ரூபா 46,114,932 இற்கான சம்பள மீளளிப்பு உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) மூலதனச் செலவு ஆகிய ரூபா 156,851,769 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 5.4 ஆகிய ரூபா 8,429,009 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தததுடன் அண்மித்த மீதி நூற்றிற்கு 94.6 ஆகிய ரூபா 148,422,759 இற்கான தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடங்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 502,625 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 58,919,836 உம் ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பல வருட காலமாக அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட பதவியணிக் கடன் மீதி ரூபா 31,992 ஆகும்.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் 02 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையான காலம் முதல் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டு காணப்பட்டதுடன் அவற்றினை திருத்தம் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 செயற்திட்டங்களை தாமதம் செய்தல்

------------------------------------------------------------

சபையின் ஒரு ஊருக்கு ஒரு வேலை என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 செயற்படுத்துவதற்காக ரூபா 44,730,655 தொகை பெறுமதியான 84 நிர்மாண வேலைகளை 2014 திசெம்பர் 31 வரை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) ஒப்பந்த நிருவாகம்